உ

சிவமயம்

மட்டுவில்

# சாந்தநாயகி சமேத சந்திரமௌலீசர் சிவாலய — வரலாறு



மட்டுவில்

அமரர் இராமலிங்கம் பொன்னுத்துரை

அவர்களின்

## நினைவு வெளியீடு

1 - 1 - 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மட்டுவில்

**ஆயத்காத்தோன் இராமலிங்கம் அவர்களின்**

மைந்தன்

# திரு. இ. பொன்னுத்துரை அவர்கள்



திதி வெண்பா

ஆண்டு குரோதன மார்கழி யேழ் நான்கு கதிர்
பூண்ட திருதிகையின் புக்கநாள் — மாண்புடைய
**பொன்னுத் துரை** யென்னும் பொற்புடையோன் நாதனடி
நன்னிழலை உற்றான் நயந்து.

ஆக்கம்: பௌராணிகவித்தகர் வ. குகசர்மா அவர்கள்

தோற்றம்:
**16-02-1914**

மறைவு:
**12-01-1986**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவசந்திரமௌளீசர் ஆலயம் "தொண்டர் அஞ்சு களிறுமடக்கி" என்ற திருஞானசம்பந்தர் பெருமான் அருளிய திருப்பதிகத்திற்குரிய திருக்கேதாரநாதர் சந்நிதியில் இருந்த ஓர் சிவலிங்கம் பின்னர் மதுரையிலும் அதன்பின்னர் யாழ்ப்பாணத்து நல்லூரில் கைலாயநாதர் என்னும் திருநாமந்தோடும், அதன்பின்னர் மட்டுவிற் பதியில் சந்திர மௌளீசர் என்னும் திருநாமத்தோடும் எழுந்தருளி உள்ளார். பெருமான் பிரதிஷ்டை செய்த காலந்தொட்டு இம் மட்டுவிலுக்கு சந்திரபுரம் என்ற திருநாமம் வழங்கலாயிற்று. இச் சந்திரபுரம் என்ற திருநாமத்தைப் பாராட்டி அரசினரும் "சந்திரபுர ஸ்கந்தவரோதய" என கலாசாலையை ஸ்தாபித்துள்ளனர். பெருமானுடைய திருநாமத்தைக் கொண்டு சந்திர மௌளீச வித்தியாசாலையும், தேவியின் திருநாமத்தைக் கொண்டு சாந்தநாயகி வித்தியாசாலையும் சிவநெறிச் செல்வர்கள் ஸ்தாபித்துள்ளார்கள்.

பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை ஈழ மண்டல சதகம் பாடியுள்ளார். மறவன்புலவு க. குழந்தைவடிவேல் ஆசிரியரும் பெருமான் மீதும் தேவி மீதும் தோத்திரப் பாடல் பாடியுள்ளார். இவ்வாறு மகத்துவம் பொருந்திய சிவாலய வரலாற்றைச் சுருக்கமாக எழுதி ஆயக்காரர் வழிவந்த அமரர் இராமலிங்கம் பொன்னுத்துரை அவர்களின் ஞாபக வெளியீடாக வெளிவருகின்றது. இதனை அறிஞர்கள் வரவேற்பார்களாக — இதனை எழுதியுள்ள திரு. கா. சிவபாலன் அவர்களுக்கு சிவபக்திச் செல்வமும், நீண்ட ஆயுளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சிவசந்திரமௌளீசர் சிவாலயம்
கல்வம்,
மட்டுவில்.

**சிவஸ்ரீ. அ. சிவசாமிக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மட்டுவிலுக்கு சந்திரபுரம் என்கின்ற சிறப்புப் பெயர் வரக் காரண மாக இருந்தது சிவசந்திரமௌளீசர் சிவாலயம். சந்திரமௌளீசர் சிவாலயம் பற்றி உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் ஈழ மண்டல சதகம் இயற்றி ஸ்ரீசிதம்பர சபாநாதர் சந்நிதியிலே வெளி யிட்டு பெருமானின் புகழ்வரலாற்றைச் சைவ உலகிற்கு புலப்படுத்தி யுள்ளார்கள். இந் நூலின் துணைகொண்டு வரலாற்றை எழுத முற் பட்டேன்.

இவ்வாலய கும்பாபிஷேக விழாவை எதிர்நோக்கியும் என்போன்ற பலரை கும்பாபிஷேகப் பணியில் ஈடுபடும்படியும் தூண்டுதல் செய்து வந்த குருமணி, கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் தேவர்கள் உலகம் சென்றுவிட்டார் எனவே நம் நாட்ட வரும் கும்பாபிஷேகப் பணியில் ஈடுபடச் செய்வதற்கு தூண்டுதல் முயற்சியாய் அமைவது இந்நூல் ஆகும்.

எனது சிறியதந்தையரான அமரர் திரு. இராமலிங்கம் பொன்னுத் துரை அவர்களின் ஆண்டுத் திதியை முன்னிட்டு சமர்ப்பணமாக இந் நூல் வெளிவருகின்றது. இந்நூல் வெளிவர பல்வேறு வழிகளிலும் உதவிகள் நல்கிய அன்னாரின் பிள்ளைகளில் ஒருவரான திருமதி ச. புஷ்ப ராணி அவர்களுக்கும், மருகர் திரு. செ. சச்சிதானந்தம் அவர்களுக் கும் நன்றி உடையது. மேலும் நூலுக்கு ஆசி வழங்கிய அந்தணப் பெரு மகன் சிவஸ்ரீ. சு. சிவசாமிக் குருக்கள் அவர்களுக்கும் கடமைப் பட்டுள் ளேன். இந்நூலை சமர்ப்பணம் செய்ய அச்சுவாகனம் ஏற்றித் தந்த ஸ்ரீ துர்க்காதேவி அச்சக உரிமையாளர் திரு. விஜயகுமார் அவர்களுக் கும் நன்றி உடையேன்.

மட்டுவில் வடக்கு — கா. சிவபாலன்
22-12-86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மட்டுவில் சிவசந்திர மௌலீசர் சிவாலயம்

இந்திரன் முதலும்பர் வந்தாறு திங்களினு
மிம்பர்மூ விருதிங்களு
மிறைவர்நித் தியபூசை தவறுதியற்றிட
விலங்குகே தாரமதனிற்
சுந்தரந் தந்தமகன் முந்துதா பித்திட்ட
தொன்மகா லிங்கமுதலே
தூயயாழ் பாணநல் லூர்ச்சிங்கை யாரியத்
தோன்றல்பின் னுட்கொணர்ந்தோர்
மந்திரந்தந்தபிர திட்டையை நல்லூரின்
மன்னுகயி லாயநாதா
மற்றதன் பின்நல்லை விட்டோர் மாமுதலிதர
வந்திருந்த நகர் மருவினுய்
சந்ததந் தமியனிடர் சிந்திடத் திருவருள்செய்
சாந்தநாயகி சமேத
சத்திரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சத்திரபுர தல வாசனே

உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள்

இமயமலை உலகிலே உள்ள பிரசித்திபெற்ற மலைகளில் ஒன்றாகும். இதன் தென் சாரலிலே உள்ள மகா சிவாலயம் திருக்கேதாரம். இங்கு பனிகாலத்தில் சகலமும் பனியாலேயே மூடப்பட்டிருக்கும். இக் காலத்தில் மனிதர் செல்லமுடியாமையினுல் பூசை வழிபாடுகள் நிகழ்வ தில்லை. கார்கால இறுதியாகிய புரட்டாதி மாத பூரணைமுதல் ஆறு மாதங்களும் கேதாரநாதப் பெருமானையும் கௌரி அம்மையையும் சுவர்க்கலோகத்தில் இருந்து வந்து இந்திரன் முதலாகிய முப்பத்தாறு கோடி தேவர்களும் பூசித்து வழிபாடு செய்வார்கள். இவ்வாறாக மனிதர்கள் பனிக்கால இறுதியாகிய பங்குனிமாதப் பூரணை முதல் ஆறுமாதமுஞ் சென்று வழிபாடு செய்வர்ர்கள். இங்குள்ள கேதார கௌரி அம்மையின் திருக்கரங்களிலே கரும்பு வில்லும், பஞ்ச பாணங் களும் இருக்கும். திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கேதார ஆலயம் பற்றிய தமது தேவாரத்தில்:-

''தொண்டரஞ்சு களிறும்மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிடமென்பரால்
வண்டுபாட, மயிலாட மான்கன்றுதுள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே''

எனப்போற்றியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோழ மகாராசாவின் புத்திரனைக் கவர்ந்த தைவீக மகாலிங்கம்

ஏறக்குறைய 2300 ஆண்டுகளுக்கு முன்னே சோழமகாராசாவின் மகன் ஒருவன் வடமொழி பயிலும் நோக்குடன் கௌட தேசஞ் சென்றிருந்தான். இவன் நாள்தோறும் தன் படிப்பை முடித்துக் கொண்டு கேதாரப் பெருமானையும் வழிபடுவது வழக்கம். இவ்வா லயத்தில் மன்மதனாற் பூசிக்கப்பட்ட தைவிக லிங்கத்தில் தன் பக்தி காரணமாக மனதைப் பறிகொடுத்துச் சிவலிங்கத்தை விட்டுச் செல்ல முடியாத நிலையில் சில மாதம் அங்கேயே தங்கியிருந்தான். பின்பு மன்மத லிங்கத்தை எடுத்துத் தன்வீடு சேர்த்து அரண்மனையிலே கோயில் அமைத்து மகாகும்பாபிஷேகஞ் செய்து வழிபாடு செய்து மன அமைதி அடைந்தனன்: பின்பு பாண்டிநாடு சென்று இராஜ தானியாகிய மதுரையிலே பாண்டிய மன்னனின் புத்திரர்களோடு வில்வித்தை பயின்று நட்புப்பெற்று வரலாயினன்.

## சோழ அரசிளங்குமரன் யாழ்ப்பாணம் வருகை

திருநெல்வேலியில் குடியிருந்த சைவ வேளாள் பிரபு ஒருவர் யாழ்ப்பாணம் அரசனின்றிச் சீரழிவதைக் கண்டார். இதனால் சோழ நாடு சென்று பாண்டிநாட்டு மதுரையிலே இவ் வித்தை பயிலும் சோழ மகாராசாவின் மகனை அரசன் அனுமதியுடன் கோடிக்கரை மார்க்கமாக யாழ்ப்பாணம் அழைத்து வந்தார். அரசிளங்குமரனுக்கு நல்லூரிலே சிறப்பானதொரு அரண்மனை கட்டுவித்து நல்லூர் இராச தானியாக்கப்பட்டது. அரசிளங்குமரனுக்குத் துணைவனாகிய மழவ ராயர் முடி தூக்கிக்கொடுக்க ஸ்ரீ கங்காதரக் குருக்களால் சிங்கை வரியச் சக்கரவர்த்தி என்ற அபிஷேக நாமமும் வழங்கப்பட்டது.

## நல்லூரில் கைலாயநாதன் கோயில் பிரதிஷ்டா கும்பாபிஷேகம்

சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி என்ற பட்டப்பெயர் கொண்ட இவர் சிவபக்தியிற் சிறந்தவர். தனது அரண்மனைக்குள்ளே சிவாலயம் ஒன்றினை அமைக்க விருப்பங் கொண்டார். அதன்படி அன்றைய நல்லூர்க் கைலாயநாதப் பிள்ளையார் கோவிலுக்குச் சிறிது மேற்குப் புறமாகக் கோயில் கட்டி முடிவுபெறுந் தறுவாயில் தான் வழிபட்ட மன்மத லிங்கத்தை வைத்துப் பிரதிட்டை செய்ய எண்ணினர். உடன் சிவலிங்கத்தை வருவித்து மிகுந்த சிறப்புடன் சிவாகம விதிப்படி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இறைவன், தேவி - பெயர் கைலாய நாதர் - கைலாய நாயகி என வழங்கலாயிற்று. ஸ்ரீ வெள்ளியங்கிரி பாவனையிற் கும்பாபிஷேகம் செய்த சிறப்பினால் கைலாயகிரி முதலாங் கைலையாகவும், சிதம்பரம் இரண்டாங் கைலையாகவும் நல்லூர் மூன்றாங் கைலையாகவும் அமையும் வாய்ப்புண்டாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுவில் வந்த கைலாயநாதப் பெருமான்

சிங்கையாரியச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் 6ஆம் வழித்தோன்றல் வீரவரோதய சிங்கையாரியன். இவனுக்கு நெடுங்காலத்துக்குப் பின் ஆட்சி செய்தவர் சயசிங்கையாரியன். இவன் மந்திரி காலத்தில்தான் நல்லூர்க்கந்தசாமி கோவில் கட்டப்பட்டது. இந்த மன்னனின் சந்ததியில் ஆறுவது மன்னனுக ஆட்சி புரிந்தவன் சங்கிலி மன்னன். ஏறக்குறைய கி. பி. 1630ஆம் ஆண்டளவில் பறங்கியர் ஆட்சி நிலவியது. (ஆதாரம் ஈழ ம்ண்டல சதகம் ம. க. வே.) அந்தக் காலத்திற் பெருந் தொகையான சிவாலயங்கள் இடித்து தரை மட்டமாக்கப் பட்டன. இதை அறிந்த மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கைலாயநாத சுவாமி கோயில் குருக்கள் கோயிலின் அழிவு தினத்துக்கு இரண்டொரு தினம் முந்தியே கோவிலின் அர்த்தயாம பூசையை முடித்துக்கொண்டு சிவலிங்கப் பெருமானையும், அம்பாள் விக்கிரகத்தையும் எடுத்து அப்புறப்படுத்த நினைத்தார். இரவோடு இரவாக, தென்னைமரச் சிற்றுருளை பூட்டிய பனைமட்டையினுற் செய்யப்பட்ட வண்டியிலே சிவலிங்கப் பெருமானையும், அம்பாள் விக்கிரகத்தையும் ஏற்றி மட்டுவிலை நோக்கிக் கொண்டுவர முனைந்தார். பாரம் மிகுதியாயிருந்ததால் அம்பாள் விக்கிரகத்தைத் திருமஞ்சனக் கிணற்றில் இறக்கிவிட்டார். சிவலிங்கத்தை மாத்திரம் கொணர்ந்து "கல்வம்" என்னும் மட்டுவிலில் உள்ள திடரில் செங்கற் திருப்பணியாக செய்யப்பட்ட சிவன் கோவில் திருமஞ்சன கிணற்றில் இறக்கிவிட்டார். பொழுது புலரும் முன் மிக்க வேதனையுடன் வீடு சேர்ந்தார். பின்பு இச் சிவன்கோவிலும் இடித்தழிக்கப்பட்டது. சிலகாலஞ் செல்ல குருக்களும் சிவகதியடைந்துவிட்டார். பின்னர் பறங்கியர் ஆட்சியும் ஒழிந்துவிட்டது.

## வன்னியசிங்க முதலியாரின் கனவில் சிவலிங்கப் பெருமான்

புனருத்தாரனமின்றிக் கிலமடைந்திருந்த கோவிலின் திருமஞ்சன கிணற்றிற் சிவலிங்கப் பெருமான் தான் மறைந்து இருக்கும் இடத்தைக் காண்பித்து, கும்பாபிஷேகம் செய்து வழிபடும்படி வன்னிய சிங்க முதலியாரின் கனவிற் தோன்றி உணர்த்தினர். வன்னியசிங்க முதலியார் விடிந்ததும் மிக்க மகிழ்ச்சியுடன் வேலையாட்களை அழைத்தார். வேலையாட்களின் உதவியுடன் திருமஞ்சனக் கிணற்றில் இருந்து சிவலிங்கம் வெளியேற்றப்பட்டது. பாலாலயம் ஒன்று அமைத்துச் சிவலிங்கம் புரதிட்டை செய்யப்பட்டது. மீள, இந்தியாவில் இருந்து சிற்பாசாரியர்களை வரவழைத்து வைரக்கற்றிருப்பணியாகக் கட்டப் பட்டதன்மேல் சிவாகம முறைப்படி கும்பாபிஷேகம் நடைபெற்றது. கனவில் திருவாய் மலர்ந்த வண்ணம் சிவசந்திர மௌளீசர், சாந்த நாயகி என சிவனுக்கும், அம்மைக்கும் பெயர் சூட்டப்பட்டது. இக் கோவிலின் சிற்பக்கலைகள் பல்லவர்கால ஆட்சிமுறையில் இருக்கும் கலைகளை ஒத்தனவாக இருப்பது கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரமௌளீசர் சமேத சாந்தநாயகி அம்பாள் ஆலயச் சிறப்பு:

இறைவனின் பெயர் சந்திரமௌளீசர் என்றமையால் மட்டுவில் "சந்திரபுரம்" என்ற பெயர் பெற்றது. இவ்வாலயத்தின் சந்நிதானத்தில் சந்திர புஷ்கரணி என்ற தீர்த்தக் கேணியும் உண்டு. சிவ தீர்த்தம், சக்திதீர்த்தம் என இரண்டு திருமஞ்சனக் கிணறுகளும் காணப்படுவதும் மாண்பேயாம். அத்துடன் கிழக்குப் பக்கத்தில் 108 இதழ்ச் செந்தாமரைத் தடாகமும் அமைந்திருத்தல் கருதத்தகும்.

## சிவசந்திர மௌளீசர் ஆலயம் பற்றிய நூல்கள்:

இன்று இச் சிவாலயம் பற்றி எடுத்துக்கூறும் நூல்களில் மிகவும் பழமைவாய்ந்தது உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களின் ஈழ மண்டல சதகமாகும். அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசாமிக் குருக்கள் வெளியிட்ட சைவப்பிரகாசிகை புத்தகம், சிவசந்திரமௌளீசர், சாந்தநாயகி திருப்பதிகங்கள் — மறவன்புலவு ம. குழந்தைவடிவேலு மட்டுவில் கல்வம் வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் — 1976 ஆகியவற்றிலும் சிவாலயம் பற்றிய வரலாறுகள் காணப்படுகின்றன. இவ்வாலயம் யாழ்ப்பாணத்தில் உள்ள புராதன சிவாலயங்களில் ஒன்ருக மிளிர்கின்றது.



ஸ்ரீ துர்க்காதேவி அச்சகம் — துர்க்காபுரம், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org